# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 2011 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம்

*(2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2011*, நவெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2011 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ. 22/2010

### ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக : -

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

117 ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

“ (1) பதிவு செய்யப்படுவதற்கென சமர்ப்பிக்கப்படும் சாதனம் ஒவ்வொன்றும் (விருப்பாவணம் ஒன்றைத் தவிர்ந்த) அதில் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அட்டவணையொன்றில் அதனால் பயனுறுத்தப்படும் காணி அல்லது அசைவற்ற ஆதனம் அமைந்திருக்கும் மாவட்டம், பற்று, கோறளை, பிரதேசச் செயலாளர் பிரிவு, உள்ளூரதிகார சபைப் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு மற்றும் கிராமம் என்பவற்றையும் அத்துடன் சாதனத்தினால் பயனுறுத்தப்படும் காணி அல்லது அசைவற்ற ஆதனம் முறையே (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது அபிவிருத்தியடைந்த இடப்பரப்பினுள் அமைந்திருக்கும் விடயத்தில் வரிமதிப்பீட்டிலக்கம் அத்துடன் அத்தகைய காணி அல்லது அசைவற்ற ஆதனம்

2-PL 006247-1,115 (2011/09)

அமைந்திருக்கும் தெருவின் பெயர், எதுவுமிருப்பின், அவற்றையும் குறித்துரைத்து அதன் எல்லைகளையும் பரப்பளவையும் பற்றிய செம்மையானதும் தெளிவானதுமான விவரணமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்